Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# நாலாயிர திவ்ய பிரபந்தங்களில் இசை

**சந்திரிகா சுஜித்குமார்**
**போதனாசிரியர், இசைத்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
csellathurai2007@gmail.com

22

**ஆய்வுச்சுருக்கம்**

இந்து மதத்தின் வைணவ சமயத்தின் ஆதாரமாக கொண்டாடப்படும் பெருமாளை குறித்து பாடப்பட்ட பக்திப்பாடல்களான நாலாயிர திவ்ய பிரபந்தங்களில் காணப்படும் இசைக்குறிப்புக்கள் பற்றி சுருக்கமாக ஆராயப்படவுள்ளது.

பன்னிரு ஆழ்வார்கள் பற்றியும் அவர்களால் அருளப்பட்டவையும், நாலாயிரம் பாடல்களின் தோற்றம் பற்றியும், அவற்றில் பயன்படுத்தப்பட்ட பண்கள் மற்றும் கூறப்பட்டடுள்ள தாளங்கள், கூறப்பட்டுள்ள இசைக்கருவிகள் பற்றி அறிந்து கொள்ளும் நோக்கில் ஆராயப்படவுள்ளது.

**திறவுச்சொற்கள்:** பன்னிருஆழ்வார்கள், நாலாயிரம், திவ்யபிரபந்தம், பாடல்கள், இசை, பண்

**முன்னுரை**

கி.பி 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 9ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிக்குள் பன்னிரு ஆழ்வார்களால் அருளப்பட்ட பாடல்களே நாலாயிர திவ்ய பிரபந்தமாகும். வைணவ சமயப் பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள் ஆகும். இப் பாடல்களை 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாதமுனிகளே 'ஆழ்வார்கள் அருளிச்செயல்கள்' என இவற்றைத் தொகுத்தார்.

ஆழ்வார்களின் ஆழ்ந்த அனுபவத்தின் வெளிப்பாடாக பாசுரங்கள் அமைகின்றன. அந்தவகையில் நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் காணப்படும் இசைக்குறிப்புகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

பாசுரங்களில் காணப்படும் பண் பற்றிய குறிப்புக்கள், இசைக்கருவிகள், தாள இசைக்கருவிகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

**நாலாயிர திவ்ய பிரபந்தப் பாடல்களின் சிறப்பு**

வேதங்களில் ரிக், யசுர், சாமம் அதர்வணம் போன்றவற்றின் சாரத்தைத் திரட்டி பன்னிரு

ஆழ்வார்கள் திவ்ய பிரபந்தமாய் அருளிச் செய்தனர். எனவே அவர்கள் அருளிய பாசுரங்கள் தமிழ் வேதம் எனவும், திராவிட வேத சாகரம் எனவும் அழைக்கப்படுகின்றன. திவ்ய என்னும் வட சொல்லிற்கு மேன்மை, புனிதம், தெய்வீகம், இனிமை, மேலான என்றெல்லாம் பொருள் உண்டு. எம்பெருமானுடைய கல்யாண குணங்களில் ஆழ்ந்த ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்கள் நான்காயிரம் ஆகும். எனவே நாலாயிரம் எனவும், திவ்வியனான ஸ்ரீமந்நாராயணனை பந்தப்படுத்துவதால் அதாவது பக்தியினால் கட்டிவிடுவதால் “திவ்வியப் பிரபந்தம்” என நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் என அழைக்கப்பட்டது.

அழிவில்லாத ஆத்மா இறைவனோடு இணைய விரும்புதலை உணர்த்துவதே திவ்யப் பிரபந்தத்தின் உட்பொருளாகும். அவ் ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரம் பாக்களும் தமிழ் மொழிக்கும், பக்தி இசைக்கும் ஓர் அரிய கருவூலம் என்றே குறிப்பிடலாம். திவ்யப் பிரபந்தத்தில் யாப்பு விகற்பங்களையும் தமிழ் மரபுப்படி அமைந்த பாக்களையும் காணமுடியும். எடுத்துக்காட்டாக நாலடிமேல்வைப்பு, திருவெழுக்கூற்றிருக்கை, திருவிருத்தம், அடிமடக்கு, தாண்டகம், திருச்சந்தவிருத்தம், அந்தாதி, பல்லாண்டு, திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி, மடல், பிள்ளைத்தமிழ், போன்ற பல இலக்கிய நயங்களை கண்டு உணர முடியும்.

அரிய வழக்கிசைப் பாடல்களாக பூச்சூடல், சீலக்குதம்பை, பூச்சி காட்டுதல், காது குத்துதல்,நீராட அழைத்தல், குழல்வாரக் காக்கையை அழைத்தல், காப்பிடுதல், கோல் கொண்டு வா ஆகிய பாடல்களைக் காணலாம்.

**பன்னிரு ஆழ்வார்களும் அவர்களால் அருளப்பட்டவையும்**

ஏனைய ஆழ்வார்களுக்கு முன்பு அவதரித்து அவர்களுக்கு வழிகாட்டியாய் திகழ்ந்தமையினால் முதலாழ்வர்கள் எனப் பெயர் பெற்றவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் போன்றோர் ஆவார்.

| இல | ஆழ்வார்கள் | பிறந்த ஊர் | அருளியவை |
|---|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் | காஞ்சிபுரம் திருவெ·.கா | முதல் திருவந்தாதி<br>**100 பாடல்கள்** |
| 2. | பூதத்தாழ்வார் | திருக்கடல்மலை | இரண்டாவது திருவந்தாதி<br>**100 பாடல்கள்** |
| 3. | பேயாழ்வார் | சென்னை மயிலாப்பூர் | மூன்றாவது திருவந்தாதி<br>**100 பாடல்கள்** |
| 4. | திருமழிசை ஆழ்வார் | திருமழிசை | நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்<br>**216 பாடல்கள்** |
| 5. | நம்மாழ்வார் | திருக்குருகூர் | ரிக் வேத சாரம் - திருவிருத்தம்<br>அதர்வண வேத சாரம்- பெரிய திருவந்தாதி<br>யசுர் வேத சாரம் - திருவாசிரியம்<br>சாம வேத சாரம் - திருவாய்மொழி<br>**1296 பாடல்கள்** |
| 6. | மதுரகவியாழ்வார் | திருக்கோளூர் | கண்ணிநுண் சிறுத்தாம்பை<br>**11 பாடல்கள்** |
| 7. | குலசேகரஆழ்வார் | சேரநாட்டு திருவஞ்சிக்களம் | பெருமாள் திருமொழி<br>**105 பாடல்கள்** |
| 8. | பெரியாழ்வார் | ஸ்ரீவில்லிபுத்தூர் | திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி<br>**473 பாடல்கள்** |
| 9. | ஆண்டாள் | ஸ்ரீவில்லிபுத்தூர் | திருப்பாவை, நாச்சியார் திருமொழி<br>**173 பாடல்கள்** |
| 10. | தொண்டரடிப்பொடியாழ்வார் | திருமண்டங்குடி | திருமாலை, திருப்பள்ளியெழுச்சி<br>**55 பாடல்கள்** |
| 11. | திருப்பாணாழ்வார் | உறையூர் | அமலனாதிபிரான்<br>**10 பாடல்கள்** |
| 12. | திருமங்கையாழ்வார் | திருக்குரையலூர் | பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுத்தாண்டகம், திருஎழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்<br>**1361 பாடல்கள்** |

**நாலாயிரம் பாடல்களின் தோற்றம்**

இப் பன்னிரு ஆழ்வார்களும் அருளிய நான்காயிரம் பாசுரங்களையும் நமக்கு தொகுத்து அளித்தவர் நாதமுனிவர் ஆவார். குடந்தையில் நாத முனிகள் வாழ்ந்து வந்தபோது அங்குள்ள ஆலயத்திற்கு வந்த ஒரு அடியவர் “ஆராவமுதே” என்ற பாசுரத்தைப் பாடினார். அதனைக்கேட்டு மனம் நெகிழ்ந்திருந்த வேளையில் இறுதிப்பாடலில் “ஓராயிரத்தில் இப்பத்தும்” என்ற வரியைக் கேட்டதும் இதனைப் போல் ஆயிரம் பாக்களா? என வியந்தார். அவற்றைக் கண்டுபிடிக்கும் ஆவலினால் நம்மாழ்வார் அவதரித்த திருநகரிக்குச் சென்றார். மதுரகவிகளின் கண்ணினுண் சிறுத்தாம்பு – 11 பாடல்களையும் 12000 முறை ஜபித்து நாலாயிரம் பாக்களையும் பெற்றார். நாலாயிர திவ்ய பிரபந்தங்களை அடைவுபடுத்திய இவரே அவற்றைப் பாடுவதற்குரிய பண்களையும், தாளங்களையும் வகுத்துக் கொடுத்துள்ளார். பாசுரங்களை தனது மருமகன்களான மேலையகத்தாழ்வார் கீழையகத்தாழ்வார் ஆகிய இருவருக்கும் இசையுடன் கற்பித்தார். நாதமுனிகளின் மருமக்கள் இருவரும் ஆலயத்தில் இசை பாடிவர இறைவன் அவர்கள் இருவருக்கும்

மணவாளப் பெருமாள் அரையர், நாதவினோத அரையர் என்ற விருதுகளை வழங்கி அவர்களுக்குக் குல்லா, தொங்கல், பரிவட்டம் ஆகியவற்றை அளிக்கச் செய்தார். இக் குறிப்பு கோயில் ஒழுகு என்ற நூலின் மூலம் அறியமுடிகின்றது.

**நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் காணப்படும் இசைக்கூறுகள்**

திவ்யப் பிரபந்தப் பாசுரங்களை அருளிச் செய்த ஆழ்வார்கள் இறைவனைக் குழந்தையாகவும் நாயகனாகவும் பாவித்து பாடியுள்ளனர். சொல் நயமும், பொருள் நயமும் பக்தி நயமும் மிக்க இப்பாடல்களில் பெரும்பான்மையானவை இனிய பண்களில் அமைத்துப் பாடுவதற்கு உகந்தவையாகும். ஆண்டாள் "இன்னிசையால் சொன்ன மாலை ஈரைந்தும்" என்று நாச்சியார் திருமொழியில் கூறியது போல் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கள் அனைத்தும் கருத்துச் செறிவும் சந்த அழகும் கொண்டவை. தேவாரப் பாடல்கள் பலவகையான பண்களில் பாடுவதற்குகந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளதைப் போல, திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களுக்குப் பண்களும் தாளங்களும் குறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்

பெரியாழ்வார் பாடியுள்ள திருப்பல்லாண்டுப் பாடல்கள் இசை அமைப்பதற்கு எற்ற முறையில் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து பெரியாழ்வார் தாலாட்டுப் பாடல்கள் பாடியுள்ளமையும் அப்பாடல்கள் தாலாட்டுப் பாடல் பாடும் மரபையொட்டி பாடலின் இறுதியில் 'தாலேலோ' என்னும் தொங்கலுடன் முடிவுறுவதைக் காணலாம்.

***"மாணிக்கங்கட்டி வயிரமிடைகட்டி***
***ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச்சிறு தொட்டில்***
***பேணியுனக்கு பரமன் விடுதந்தந்தான்***
***மாணிக்குறளனே தாலேலோ***
***வையமளந்தானே தாலேலோ"*** **(பெரியாழ்வார் திருமொழி 44.1)**

ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவைப் பாடல்கள் அனைத்தும் தெய்வமணம் கமழும் தீந்தமிழப் பாடல்கள் ஆகும். மணிவாசகர் அருளிய திருவெம்பாவைப் பாடல்களுடன் இவை ஒப்பிடத்தக்கவை ஆகும். திருவெம்பாவையில் இளமகளிர் ஒருவரையொருவர் துயில் எழுப்புவது போல் பாவனை செய்யப்பட்டுள்ளது. ஆண்டாள் அருளிய

திருப்பாவையில் இளநங்கையர்கள் ஒருவரையொருவர் துயில் எழுப்புவதோடு, கண்ணபெருமானையும் துயில் எழுப்புவது போல் பாடப்பட்டுள்ளதனைக் காணமுடியும்.

"***மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்***
***நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்.. "***

***(திருப்பாவை-1)***

**பாடல்களில் காணப்படும் பண்கள்**

நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களில் பெரும்பான்மையானவை பல்வேறு இனிய பண்களில் தாளத்துடன் அமைத்துப் பாடப்பெற்றவை என்பதற்கு பல சான்றுகளைக் காணலாம்.

எடுத்துக் காட்டு: நம்மாழ்வார் அருளிய திருமொழி

"***எண்ணில் சோர்விலற்தாதி யாயிரத்துள்***
***இவையுமோர் பத்திசையோடும்***
***பண்ணில் பாட வல்லாரவர்***
***கேசவன் தமரே"***

***(திருவாய்மொழி-இரண்டாம் பத்து ஆறாவதுபாடல் (6-10)***

வாய்மொழியாகவே கற்பிக்கப்பட்டு வந்த திவ்ய பிரபந்தம் ஒரு காலகட்டத்தில் இசையுடன் பாடப்பட்டு வந்தது. ஆனால் பிற்காலத்தில் இதனைப் பாடியவர்கள் விரைவான மரணமும், வைகுந்தப்பதவியும் அடைவதாகக்கருதி இவற்றைப் பாடுவதில் அக்கறை காட்டவில்லை. இதனால் பாசுரங்களின் பண்ணமைப்பு முறை மறையத் தொடங்கிற்று. பழைய ஓலைச் சுவடிகளில் பாசுரத்தின் 4000 பாடல்களுக்கும் பண்களும், தாளங்களும் குறிப்பிடப்பட்டிருந்தது. மதுரை தமிழ்ச் சங்கத்தில் உள்ள திவ்ய பிரபந்த ஏட்டுச்சுவடியில் பெரிய திருவாய்மொழிக்கும், திருவாய்மொழிக்கும் பண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன: முதிர்ந்த குறிஞ்சி, செருந்தி, இந்தளம், தக்கராகம், நாட்டம், பழந்தக்கராகம், பஞ்சமம், கைசிகப் பாலையாழ், நட்டராகம், பாலையாழ், நட்டபாடை, வியந்தம், கொல்லி, புறநீர்மை, சீகாமரம், தக்கேசி, குறிஞ்சி, காந்தாரம், பழஞ்சுரம் போன்றவையாகும்.

அதிகமாக பழக்கத்தில் உள்ள கல்யாணி, தோடி, போன்ற இராகங்கள் காணப்படுவதோடு, அபரூபம், கண்டா, சைந்தவி, சோகவராளி, தேசிய இராகம்,

துசாவந்தி, எமுநா இராகம் ஆகியவையும் காணப்படுகின்றன.

**நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் கூறப்பட்ட தாளங்கள்**

நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் ஏழு தாளங்கள் பற்றி கூறப்பட்டுள்ளன. அவையாவன

1. கடையொத்து
2. இடையொத்து
3. மிடைத்தொத்து
4. முடுகினமிடைத்தொத்து
5. ஏழொத்து
6. ஒன்பதொத்து
7. மழுமுடித்தல் போன்றிவையாகும்.

**இசைக்கருவிகள்**

ஆழ்வார்கள் இசைக்கருவிகளை இசைத்துப் பாடியுள்ளனர் என்பதற்கு சான்றாக திருவரங்கத்தில் வீணையும் கையுமாக இறைவனுக்கு அந்தரங்கராக இருந்த திருப்பாணாழ்வார் சரித்திரத்தின் மூலமும், திருமங்கையாழ்வார் நாயகி பாவத்தில் வீணையுடன் பரமனைப் பாடி மகிழ்ந்ததன் மூலமும், பெரியாழ்வார் தான் அமர்ந்திருந்த யானையின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணிகளை தாளமாக இசைத்துப் பல்லாண்டு பாடியதன் மூலமும் ஆழ்வார்களின் இசைஞானத்தை உணரமுடிகின்றது.

பண்களின் பெயர்களும் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக,

***"கோவலர் கோவிந்தனைக் குறமாதர்கள் பண் குறிஞ்சிப் பாவொலி பாடி"***

(பெரியாழ்வார் திருமொழி- 351- 4வது பாடல்)

ஆழ்வார் பாசுரங்களின் மூலம் பல கூத்துக்களைப் பற்றி அறியமுடிகின்றது.

***"சோத்தம் பிரானென்று நீபோய் கோத்துக்குரவை பிணைந்திங்கு வந்தால்..***

(பெரியாழ்வார் திருமொழி- 2ஆம் பதிகம், 3 ஆம் திருமொழி 5வது பாசுரம்)

என்று குரவைக்கூத்து பற்றி கூறப்பட்டுள்ளது.

இசைக்கருவிகள் பற்றிய அகச்சான்றுகளை எடுத்துநோக்கின், நரம்புக்கருவியாகிய வீணை பற்றி பல இடங்களில் குறிப்பு காணப்படுகின்றது. வீணை வாசிக்கும் முறையை திருமங்கை மன்னன் திருநெடுந்தாண்டகத்தில் அழகாக எடுத்தியம்புகின்றார்.

***"சொல்லுயர்ந்த நெடுவீணை முலை மேல் தாங்கி***

*தூமுறுவல் நகை இறையே தோற்றெனக்கு*
*மேல்விரல்கள் சிவப்பெய்தத்தடவி ஆங்கே*
*மேன் கிளிபோல் மிக மிழற்றும் என்பேதையே"*

*(திருநெடுந்தாண்டகம்-2066)*

*"நன்னரம்புடைய தும்புருவோடு.., வீணை மறந்து யாழிசை..*

**(பெரியாழ்வார் மூன்றாம் பத்து ஆறாம் திருமொழி)**

பெரியாழ்வார் திருமொழியில் குழலை இசைத்த விதம் பற்றியும் அவ்வாறு குழல் ஊதியபோது ஏற்பட்ட முகபாவங்களையும் மிகத்தெளிவாக கூறியுள்ளார்.

*"இடஅணரை இடத்தோளோடு சாய்த்து*
*இரு கை கூடப் புருவம் நெரிந்தேற*
*குடவயிறுபட வாய்கடை கூட*
*கோவிந்தன் குழல் கொடுதினபோது.."* *(பெரியாழ்வார் திருமொழி)*

*"நெடுமால் ஊதி வருகின்ற குழல்.."* *(நாச்சியார் திருமொழி)*

*"கனிவாயும் குழலும் கண்டு, குழல் இனிது ஊதி வந்தாய்,*
*வேய்ங்குழலோசையும் விடாமணிக் குரலும்.."*
*(திருப்பள்ளியெழுச்சி)*

*"ஆநிரை மேய்த்துக் குழலூதி.."* *(மூன்றாம் திருவந்தாதி)*

*"குழலோசை கேட்கில் குழலென்ன யாழுமென்ன ஊதுமத்தீங்குழற்கே.."*
*(திருவாய்மொழி)*

போன்ற பாசுரங்களில் குழலைப் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.

ஆழ்வார்களது பாடல்களில் தோல் கருவிகளாகிய பறை, முழவு, முரசு, மத்தளம் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புக்களும் கிடைக்கின்றன.

எடுத்துக்காட்டு,

*"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத.."* *(நாச்சியார் திருமொழி)*

*"சங்கு வில் வாள் தண்டு சக்கரம்"* *(திருவாய்மொழி)*

*"ஏதமில் தண்ணுமை ஏக்கம் மத்தளி*
*யாழ் குழல் முழவோடிசை திசை*
*கெழுமி கீதங்கள் பாடினர்"*

*(திருப்பள்ளியெழுச்சி - 9)*

*“காளங்கள் வலம்புரி கலந்து எங்கும் இசைத்தனர்”*

*(பத்தாம் பத்து ஒன்பதாம் திருவர்ய்மொழி பாடல் 6)*

என்ற தொடர்களின் மூலம் பலர் இணைந்து பாடியதையும் பல கருவிகள் இணைந்து இசைத்தமையும் புலனாகின்றது. மேலும், பண்ணிசைக் கருவிகளான யாழ், குழல் போன்ற கருவிகளும் தண்ணுமை, எக்கம், மத்தளம், பறை, முரசு, முழவம், காளங்கள் போன்ற பல தாள இசைக்கருவிகளும் சேர்ந்து இசைக்கும் பழக்கம் வழக்கில் இருந்தமை புலனாகின்றது.

**முடிவுரை**

ஆழ்வார்களது நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாடல்களிலல் பல இசைக்குறிப்புக்கள் கிடைக்கின்றன. அவற்றில் சில எடுத்துக்காட்டுதல்களுடன் சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளது. பண்ணைப் பற்றிய குறிப்புக்கள், பண்ணின் பெயர்கள், யாழ், குழல், வீணை போன்ற பண்ணிசைக்கருவிகள், முரசு, முழவம், பறை, மத்தளம், போன்ற தாள இசைக்கருவிகள், தாளங்கள் பற்றியும் சான்றுகளுடன் கூறப்பட்டுள்ளது. இச்சான்றுகளின் மூலம் ஆழ்வார்களது இசை ஞானத்தை அறியமுடிகின்றது. எனவே ஆழ்வார்கள் அருளிச்;செய்த திவ்யபிரபந்தங்களை இசையுடன் கற்று ஞானத்தை வளர்க்க வேண்டும். இசை மேடைகளில் திவ்ய பிரபந்தப் பாடல்கள் பாடி ஆழ்ந்த அனுபவங்களை பெற்று நம்முன்னோர்களது கலையை வளர்க்க வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**

- அருணாசலம்.மு (2009), தமிழ் இசை இலக்கிய வரலாறு (தொகுதி 1) கடவு பதிப்பகம், மதுரை.
- மீரா வில்வராயர் (2013) கர்நாடக சங்கீதம் ஓர் அறிமுகம், குமரன் பதிப்பகம், கொழும்பு, இலங்கை.
- தனபாண்டியன் து.ஆ, இசைத்தமிழ் வரலாறு, மூன்றாம்பகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.